# இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்
ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை–34.

பெறுநர் (மின்னஞ்சல் மூலம்)
அனைத்து மண்டல இணை ஆணையர்கள்
அனைத்து இணை/துணை/உதவி
ஆணையர்கள்/செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்கள்

<u>ந.க.எண்.34106/ 2022/இசட் 1/ நாள் 26.07.2022</u>

ஐயா/அம்மையீர்,

பொருள் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் – 2022–2023 – அறிவிப்பு எண் 14– திருக்கோயில்களில் இலவச திருமணம் நடத்துதல் – அரசாணை வெளியிடப்பட்டது – விவரம் தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 04.05.2022
2. இவ்வலுவலக கடித ந.க.எண்.34106/2022/இசட்1/நாள் 07.07.2022 மற்றும் 18.07.2022
3. அரசாணை (நிலை)எண்.163/சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அநி1–1)துறை நாள் 18.07.2022

------

2022–2023–ம் ஆண்டின் சட்டமன்ற பேரவையின் வரவு செலவு கூட்டத்தொடரில் மானிய கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

<u>அறிவிப்பு எண்.14</u>

**"ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படும் இதற்கான செலவினத்தை திருக்கோயில்களே ஏற்கும்"**.

பார்வை இரண்டில் காணும் கடிதங்களில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக திருக்கோயில்களில் திருமணம் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மண்டல இணை ஆணையர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

பார்வை 3–இல் காணும் அரசாணையில் திருக்கோயில்களில் நடத்தப்படும் ஒரு இணை திருமணத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள திட்ட செலவினை ரூ.15,000/–இல் இருந்து ரூ.20,000/– ஆக உயர்வு செய்யவும், மேலும் ஆண்டுதோறும் ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 ஏழை எளிய இணைகள் வீதம் 20 மண்டலங்களில் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்களை நடத்தவும், இதற்கு தேவைப்படும் மொத்த செலவினத் தொகை ரூ.1,00,00,000/–யினை திருக்கோயில் நிதி மூலம் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசாணை நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

<u>திட்ட விவரம்</u>

| வ. எண் | திட்ட விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | திருமாங்கல்யம் 2 கிராம் தங்கம் | 10,000/– |
| 2. | மணமகன் ஆடை | 1000/– |
| 3. | மணமகள் ஆடை | 2000/– |
| 4. | திருமணத்திற்கு மணமகன், மணமகள் வீட்டார் 20 நபர்களுக்கு உணவு | 2000/– |
| 5. | மாலை, புஷ்பம் | 1000/– |
| 6. | பாத்திரங்கள் வகையறா | 3000/– |
| 7. | எதிர்பாராத செலவு | 1000/– |
| | கூடுதல் | 20,000/– |

எனவே, ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திலும் 25 ஏழை எளிய இணைகளை தேர்வு செய்து திருக்கோயில்கள் மூலம் மேற்குறிப்பிட்டுள்ள திட்டச் செலவின்படி திருமணங்களை நடத்த தயார் நிலையில் இருக்க மண்டல இணை ஆணையர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு : அரசாணை நகல்

ஒம்/–ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உண்மைநகல் உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

27.7.22

நகல்
எச், ட்டி, யு பிரிவுகள்
மிகை

சுருக்கம்

இந்து சமய அறநிலையத் துறை - 2022-2023-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு - ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்துதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி1-1) துறை

அரசாணை (நிலை) எண்.163

நாள் 18.07.2022
சுபகிருது வருடம், ஆடி - 02
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.185, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (அ.நி1-1) துறை, நாள் 02.09.2011.
2. இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் கடித ந.க. எண்.34106/2022-1/இசட்1, நாள் 24.06.2022.

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருக்கோயில்களில் நடத்தப்படும் ஒரு இணை இலவச திருமணத்திற்கு ரூ.5,500/-லிருந்து ரூ.15,000/- ஆக உயர்வு செய்யவும், 2011-2012-ஆம் ஆண்டில் 1006 இந்து சமயத்தை சேர்ந்த சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை, எளிய இணைகளுக்கு இலவசத் திருமணம் செய்து வைக்கவும், 1006 இணைகளின் திருமணத்திற்கு செலவாகும் மொத்தத் தொகை ரூ.1.51 கோடியை உபரி நிதி மிகுந்த திருக்கோயில்களிலிருந்து இந்து சமயம் மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 36-ன் கீழ் நிதிமாற்றம் செய்து கொள்ளவும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையருக்கு அனுமதியளித்து அரசால் ஆணையிடப்பட்டது.

2. சட்டமன்றப் பேரவையில் 04.05.2022 அன்று நடைபெற்ற 2022-2023-ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

> "ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படும். இதற்கான செலவினத்தை திருக்கோயில்களே ஏற்கும்".

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், ஒரு இணை ஆணையர் மண்டலத்தில் 25 ஏழை எளிய இணைகள் வீதம் ஆண்டிற்கு 500 இணைகளுக்கு திருக்கோயில் நிதி

மூலம் திருமணம் நடத்தவும் ஒரு இணை திருமணத்திற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரப்படியான திட்டத்தின்படி செலவு மேற்கொள்ளவும் அனுமதி வழங்க அரசை கேட்டுக் கொண்டுள்ளார்:-

<u>திட்ட விவரம்</u>

| வ. எண் | திட்ட விவரம் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | திருமாங்கல்யம் 2 கிராம் தங்கம் | 10,000/- |
| 2. | மணமகன் ஆடை | 1000/- |
| 3. | மணமகள் ஆடை | 2000/- |
| 4. | திருமணத்திற்கு மணமகன், மணமகள் வீட்டார் 20 நபர்களுக்கு உணவு | 2000/- |
| 5. | மாலை, புஷ்பம் | 1000/- |
| 6. | பாத்திரங்கள் வகையறா | 3000/- |
| 7. | எதிர்பாராத செலவு | 1000/- |
| | கூடுதல் | 20,000/- |

மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருக்கோயில்களில் நடத்தப்படும் ஒரு இணைத் திருமணத்திற்கு அனுமதிக்கப்பட்ட திட்ட செலவாக ரூ.15,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும், தற்போதைய விலைவாசி உயர்விற்கு ஏற்ப ஒரு இணை திருமணத்திற்கு மேற்குறிப்பிட்டவாறு திட்ட செலவாக ரூ.20,000/- தொகையினையும், 500 இணைகளுக்கு திட்ட செலவாக ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிர்ணயம் செய்து அரசாணை பிறப்பிக்குமாறு ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்றும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டும் திருக்கோயில்களில் நடத்தப்படும் ஒரு இணை இலவச திருமணத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள திட்டச் செலவை ரூ.15,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்வு செய்யவும், ஆண்டு தோறும் ஒரு இணை ஆணையர் மண்டலத்தில் 25 ஏழை எளிய இணைகள் வீதம், 20 மண்டலங்களில், 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்களை நடத்தவும், இதற்கு தேவைப்படும் மொத்த செலவினத் தொகை ரூ.1,00,00,000 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்)-ஐ திருக்கோயில் நிதி மூலம் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை-34.

நகல்:-

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.

இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. சந்யா
18/7/22

பிரிவு அலுவலர்

18/7/22